# மாதிரி வினாத்தாள் (MODEL QUESTION PAPER)

## பகுதி III - சிறப்புத் தமிழ் (PART III - TAMIL - Optional)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வகுப்பு | : | XI | மதிப்பெண் | : | 80 |
| பதிவு எண் | : | | நேரம் | : | 2 ½ மணி |
| பெயர் | : | | சிந்தனை நேரம் | : | 1/4 மணி |

### General Instructions to Candidates

1. There is a 'Cool off time' of 15 minutes in addition to the writing time 2½ hrs.
2. You are neither allowed to write your answers nor to discuss anything with others during the 'Cool off time'.
3. Use the 'Cool off time' to get familiar with questions and to plan your answers.
4. Read questions carefully before answering.
5. All questions are compulsory and only internal choice is allowed.

### பொதுவழி முறைகள்

1. விடை எழுதத் தந்துள்ள 2½ மணி நேரத்திற்கு மேலாகத் தொடக்கத்தில் 15 நிமிடங்கள் சிந்தனை நேரமாகத் (Cool off time) தரப்பட்டுள்ளது. இந்நேரத்தில் விடை எழுதவோ விவாதிக்கவோ கூடாது.
2. இந்நேரத்தை வினாக்களைப் படித்துப் புரிந்துகொள்ளவும் விடையைத் திட்டமிடவும் பயன்படுத்த வேண்டும்.
3. விடை எழுதும் முன்பு வினாக்களைக் கவனமாகப் படிக்கவும்.
4. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதவேண்டும்.
5. சில வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி விடை எழுதுக.

## 1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக

10 X 1 = 10

1. மரபின் விருத்தப்பாடல் ஓசையோடு புதுக்கவிதைகள் படைத்தவர்

அ) ந. பிச்சமூர்த்தி ஆ) மு. மேத்தா

இ) அப்துல் ரகுமான் ஈ) ஞானக்கூத்தன்

2. இவை இருக்கும் இடத்தில் மானுடம் கொண்டாடப்படுகிறது.

அ. அழகும் வீரமும் ஆ. அழகும் சுதந்திரமும்

இ. அழகும் திறமையும் ஈ அழகும் செல்வமும்

3. வாடை என்னும் சொல்லின் ஒரு பொருள் நாற்றம். மற்றொரு பொருள்

அ. கீழ்த்திசைக் காற்று ஆ. மேற்றிசைக் காற்று

இ. தென்திசைக் காற்று ஈ. வடதிசைக் காற்று

4. வலைப்பூக்களை வடிவமைத்துச் செயலாக்குவதில் பரவலாகப் பயன்பாட்டில் உள்ள நிறுவனம்

அ) யாகூ ஆ) எம்.எஸ்.என்

இ) கூகிள் ஈ) ரீடிஃப்மெயில்

5. கருத்தைப் புலப்படுத்துவதில் ஒருவரின் தேர்ச்சியைக் காட்டுவது, அவரது

அ. மொழித்திறம் ஆ. மொழி ஆர்வம்

இ. மொழிப்புலமை ஈ. மொழி ஆய்வு

6. Folk lore என்னும் ஆங்கிலச் சொல்லை உருவாக்கியவர்

அ. சாமுவேல் ஜாண்சன் ஆ. வில்லியம் ஜான் தாமஸ்

இ. ஆலன் டெண்டிஸ் ஈ. தார்ஸ்டன்

7. ‘அங்கே காண்பது பாம்போ கயிறோ?’ என்பது

அ. ஐயவினா ஆ. கொடைவினா

இ. கொளல் வினா ஈ. ஏவல் வினா

8. சுவைகளில் தலைசிறந்து விளங்குவது

அ. பெருமிதம் ஆ. உவகை

இ. நகை ஈ. அச்சம்

9. மென்மையான விரல்களுக்குக் குறுந்தொகைப் பாடல் கூறும் உவமை

அ. தாமரை ஆ. அல்லி

இ. ஆம்பல் ஈ. காந்தள்

10. “மதுரையில் தன் நண்பனை மணியன் சந்தித்தான்” - இவ்வாக்கியத்தின் செயப்படுபொருள்

அ. மணியன் ஆ. மதுரை

இ. நண்பன் ஈ. சந்தித்தான்

## 11 முதல் 14 வரையுள்ளவற்றைச் சரியாகப் பொருத்துக

4 X 1 = 4

| | | |
|---|---|---|
| 11. திருக்குறள் | - | அன்புநெறி |
| 12. அகநானூறு | - | தத்துவ நெறி |
| 13. மணிமேகலை | - | அறநெறி |
| 14. சித்தர் பாடல்கள் | - | ஈகைநெறி |

### 15 முதல் 18 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று கருத்துகள் அமையும்படி விடை எழுதுக

4 X 3 = 12

15. “நமக்கு இருப்பதுபோல, பறவைகளுக்கு நாடுகளும் எல்லைகளும் இல்லை” எனும் அப்துல் ரகுமான் கருத்தின் மீதுள்ள உங்கள் விமர்சனப் பார்வை என்ன?
16. ‘பழங்காலப் பண்பாட்டின் எச்சம் நாட்டுப்புறவியல்’ - இக்கூற்றை நிறுவுக.
17. ‘தேய்புரிப் பழங்கயிறு’ என்னும் உவமை புலப்படுத்தும் பொருள் யாது? விளக்குக.
18. மகளைப் பிரிந்த தாயின் ஆற்றாமையை நற்றிணை எவ்வாறு கூறுகிறது?

### 19 முதல் 23 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு கருத்துகள் அமையும்படி விடை எழுதுக.

5 X 4 = 20

19. ‘என்னுடையது என்று நீ உரிமை கொண்டாடும் எதுவும் உன்னுடையது அல்ல’ என்னும் அப்துல் ரகுமானின் கவிதை வரிகள் பற்றி உங்கள் கருத்துகளைக் குறிப்பிடுக.
20. ஞானக்கூத்தனின் ‘குருவிக்கு வேண்டுகோள்’ என்னும் கவிதையின் மறைபொருளை வெளிப்படுத்துக.
21. மொழியியலின் அடிப்படைக் கூறுகளைப் பட்டியலிட்டு விளக்குக.
22. இலக்கிய வளர்ச்சியில் இணையத்தின் பங்கு பற்றிக் குறிப்பு வரைக.
23. உழவர் பாடல்கள் வாயிலாக அறியலாகும் உழவுத் தொழில் தொடர்பான செய்திகளைத் தொகுத்தெழுதுக.

### 24, 25 வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் ஐந்து கருத்துகள் அமையும்படி விடை எழுதுக

2 X 5 = 10

24. விமலாதித்த மாமல்லனை நேர்காண நேர்ந்தால், ‘இணையமும் இலக்கியமும்’ தொடர்பாக நீவிர் கேட்க விழையும் ஐந்து வினாக்களை நிரல்படுத்துக.
25. ‘மொழியால் ஆகாயத்தில் பந்தல் போட முடியும்’ - விவாதிக்க.

### 26 முதல் 28 வரையிலான வினாக்களுக்கு, இரு பக்கங்களுக்குக் குறையாமல் கட்டுரை வடிவில் விடை தருக.

3 X 8 = 24

26. ‘கல்வியில் தொழில் நுட்பத்தின் பங்கு’ என்னும் தலைப்பில் அறிவியல் கண்காட்சி தினத்தையொட்டி உரையாற்றுவதற்கான சொற்பொழிவு உரை ஒன்று தயாரிக்க.

அல்லது

‘இன்றைய சமூக வாழ்வியலில் காட்சி ஊடகங்களின் தாக்கம்’ குறித்துக் கருத்தரங்கக் கட்டுரை ஒன்று தயாரிக்க.

27. ‘நாட்டுப்புறப் பாடல்கள் மண்ணின் மணம் வீசுவன’ - இக்கூற்றைச் சான்றுகாட்டி நிறுவுக.

அல்லது

கதைப்பாடல்களின் அமைப்பும் மொழி நடையும் குறித்து விளக்கக் கட்டுரை ஒன்று தயார் செய்க.

28. ‘வாழ்வை மேம்படுத்த உதவுபவை அற இலக்கியங்களே’ என்னும் தலைப்பில், தொலைக்காட்சியில் உரையாற்றத் தேவையான குறிப்புகளைத் தயாரிக்க.

அல்லது

போரைத் தவிர்க்கும் பொருட்டுப் புலவர் எடுத்துரைக்கும் கருத்துகளை மதுரைக்காஞ்சி வழி நின்று ஆய்க.

# சிறப்புத்தமிழ் – மாதிரிவினாத்தாள் – II
# மதிப்பீட்டுக் குறிப்புகள்

| வினா என் | விடைக் குறிப்புகள் | மதிப் பெண் | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | ஈ. ஞானக்கூத்தன் | 1 | 1 |
| 2 | ஆ. அழகும் சுதந்திரமும் | 1 | 1 |
| 3 | ஈ. வடதிசைக் காற்று | 1 | 1 |
| 4 | இ. கூகிள் | 1 | 1 |
| 5 | அ. மொழித்திறம் | 1 | 1 |
| 6 | ஆ. வில்லியம் ஜான் தாமஸ் | 1 | 1 |
| 7 | இ. ஐயவினா | 1 | 1 |
| 8 | இ. நகை | 1 | 1 |
| 9 | ஈ. காந்தள் | 1 | 1 |
| 10 | இ. நண்பன் | 1 | 1 |
| 11 | திருக்குறள் – அறநெறி | 1 | 1 |
| 12 | அகநானூறு – அன்புநெறி | 1 | 1 |
| 13 | மணிமேகலை – நகைநெறி | 1 | 1 |
| 14 | சித்தர் பாடல்கள் – தத்துவநெறி | 1 | 1 |
| 15 | • மனிதனுக்கும் இயற்கைகுமான தொடர்பு<br>• மானிடத்தின் மகத்துவம்<br>• செயற்கைவிட இயற்கை அழகானது | 1<br>1<br>1 | 3 |
| 16 | • மண்ணின் உண்மையான மணத்தை வெளிப்படுத்துவது<br>• நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கம், பண்பாடு, நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன<br>• எனவே இவைகள் பாதுகாக்கப்படவேண்டியவை | 1<br>1<br>1 | 3 |
| 17 | • அறிவுக்கும் உணர்வுக்கும் இடையே நடக்கும் மனப்போராட்டம்<br>• இரண்டு களிறுகள் தேய்ந்துபோன கயிறு ஒன்றின் இருபுறத்தையும் பற்றி இழுத்தால் அறுந்துபோகும்<br>• தலைவன் உடலை அறுந்துவிழும் தேய்ந்த பழங்கயிற்றிற்கு உவமைப்படுத்தல் | 1<br>1<br>1 | 3 |
| 18 | • நொச்சி மரம் மகளை நினைவு படுத்துகிறது<br>• கண்ணிலுள்ள மணிப்பாவை வெளியே வந்து நடை கற்பதை நினைவுகொள்கிரார்<br>• மகளின் அறிவு வளர்ச்சி | 1<br>1<br>1 | 3 |
| 19 | 1. நமக்கு உரிமையுள்ளது அனைத்தும் இயற்கை தந்தவை<br>2. இயற்கை பல வளங்களைத்தருகிறது<br>3. இயற்கைக்கு நாம் எந்தக் கைம்மாறும் செய்வதில்லை என்றாலும் பாதுகாக்கவாவது வேண்டும்<br>4. நாம் இப்பூமியில் வாழ்வதற்கான தடயத்தைப் பதிவுசெய்ய வேண்டும் | 1<br>1<br>1<br>1 | 4 |
| 20 | 1. கிராமப்புறங்களை நகரமயப்படுத்தலால் இயற்கை பல்வேறு கெடுதலுக்கு ஆளாகின்றது<br>2. சாதாரணப் பறவைகூட கூடுதேடி அலையும் நிலைக்கு ஆளாகிறது<br>3. இவ்வுலகம் மனிதர்களுக்கு மட்டுமின்றி எல்லா உயிரினங்களுக்கும் உரியது<br>4. மனிதன் தன் சுயநலத்தை மறந்து இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் | 1<br>1<br>1<br>1 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 21 | • மொழியின் அமைப்பு<br>• ஒலியனியல்<br>• உருபனியல்<br>• தொடரியல் | 1<br>1<br>1<br>1 | 4 |
| 22 | • மின் இதழ்கள்<br>• மின் நூலகங்கள்<br>• வலைப்பூக்கள்<br>• இலக்கிய விவாதங்கள்/நூலறிமுகம் | 1<br>1<br>1<br>1 | 4 |
| 23 | • நாட்டுப்புறப்பாடல்களில் உழவர் பாடல்கள் முக்கியவானவை<br>• உழவுத்தொழிலின் பல்வேறு நிலைகள்<br>• உழவுத்தொழில் தொடர்பான கருவிகள்,பயிர்கள் முதலானவை<br>• உழவர் நிலை | 1<br>1<br>1<br>1 | |
| 24 | • பொருத்தமுடைய ஐந்து வினாக்கள் (திரைப்படம் தொடர்பானவை)<br>• வடிவம்/ வினாக்கள் அமைப்பு/ தரம் | 3<br>2 | 5 |
| 25 | • அருவமானதையும் உருவம்போல் விளக்கி வர்ணிக்க முடியும்<br>• கண்முன் இல்லாதவற்றெயும் சொல்லோவியமாக்கி மனக்கண்ணில் காட்ட முடியும்<br>• உள்ளத்திரையில் வரையமுடியும் - எண்ணத்தளத்தில் பதிக்கமுடியும்<br>• காலத்தாலும் இடத்தாலும் கடந்து நீங்கியவற்றையும் அருகாமையில் கொணர்ந்து அண்மை வைக்க இய.லும்<br>• எங்கெங்கோ எடுத்துச்செல்லவும் இட்டுச்செல்லவும் கூடும் | 1<br>1<br>1<br>1<br>1 | 5 |
| 26 | • கணினி<br>• இணையம்<br>• இணையப் பயன்பாடு<br>• குறுகிய காலத்தில் அதிகமான செய்திகள் தருதல்<br>• சொற்பொருள், பாடல்பொருள் விளக்கங்கள்<br>• அகராதிப் பயன்பாடு<br>• வடிவம்<br>• கருத்துக்கோவை | 1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1 | 8 |
| | அல்லது | | |
| | • கலை/ இலக்கியம்<br>• விளையாட்டு<br>• விழாக்கள்<br>• ஆன்மிகச் செயல்கள்<br>• எல்லா நிலைகளிலும் ஊடகம் சமூக வாழ்வில் நெருக்கமாகத் தொடர்புகொண்டுள்ளது<br>• வெளியீட்டுத்திறன்<br>• கருத்துக்கோவை<br>• மொழிநடை | 1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1 | 8 |
| 27 | • நாட்டுப்புறப் பாடல்கள் இயல்பானவை<br>• சமூக வாழ்க்கையை கற்பனைக்கு இடமின்றி யதார்த்தமாக எடுத்துரைப்பவை<br>• அந்தந்த வட்டாரங்களுக்கு உரிய நிகழ்வுகளின் பிரதிபலிப்புகள்<br>• எடுத்துக்காட்டுப் பாடல்கள்/பழமொழிகள்/விடுகதைகள்<br>• மொழித்திறன்/மொழிஅமைப்பு/மொழிநடை<br>• வெளியீட்டுத்திறன்<br>• தொகுப்புரை | 1<br>1<br>1<br>2<br>1<br>1<br>1 | 8 |
| | அல்லது | | |
| | • பல்வேறு வகை (சமூகம்/புராணம்) - சார்ந்தது<br>• ஓசை அமைப்பு கொண்டவை<br>• கூறியதை மீண்டும் மீண்டும் கூறும் அமைப்பு<br>• வட்டார மொழிநடை<br>• தொடர்ச்சியாக சொல்லிக்கொண்டே சொல்லுதல்<br>• மேற்கோள்கள் | 1<br>1<br>1<br>1<br>1<br>1 | |

| | | | |
|---|---|---|---|
| | • வெளியிட்டுத்திறன் | 1 | |
| | • கருத்துக்கோவை | 1 | 8 |
| 28 | • அற இலக்கியங்கள் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான நீதிகளை எடுத்துரைப்பவை | 1 | |
| | • இப்படித்தான் வாழ வேண்டும் என வலியுறுத்துபவை | 1 | |
| | • வாழ்வியல் மதிப்பீடுகளை தொகுத்துக்கூறுபவை | 1 | |
| | • எடுத்துக்காட்டுகள் | 1 | |
| | • உரைவடிவம் | 1 | |
| | • வெளியிட்டுத்திறன் | 1 | |
| | • மொழிநடை | 1 | |
| | • கருத்துக் கோவை | 1 | 8 |
| | அல்லது | | |
| | • போரின் கொடுமை | 1 | |
| | • நிலையாமை | 1 | |
| | • நல்லாட்சி | 1 | |
| | • மறவழிகளை விட்டு அறவழியில் நடத்தல் | 1 | |
| | • கருதுகளை வரிசைப்படுத்தும் திறன் | 1 | |
| | • மொழிநடை | 1 | |
| | • வெளியீட்டுத்திறன் | 1 | |
| | • ஆய்வுரை | 1 | 8 |

# மாதிரி வினாத்தாள் (MODEL QUESTION PAPER)

# பகுதி III - சிறப்புத் தமிழ் (PART III - TAMIL - Optional)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வகுப்பு | : | XI | மதிப்பெண் | : | 80 |
| பதிவு எண் | : | | நேரம் | : | 2 ½ மணி |
| பெயர் | : | | சிந்தனை நேரம் | : | 1/4 மணி |

## General Instructions to Candidates

1. There is a 'Cool off time' of 15 minutes in addition to the writing time 2½ hrs.
2. You are neither allowed to write your answers nor to discuss anything with others during the 'Cool off time'.
3. Use the 'Cool off time' to get familiar with questions and to plan your answers.
4. Read questions carefully before answering.
5. All questions are compulsory and only internal choice is allowed.

## பொதுவழி முறைகள்

1. விடை எழுதத் தந்துள்ள 2½ மணி நேரத்திற்கு மேலாகத் தொடக்கத்தில் 15 நிமிடங்கள் சிந்தனை நேரமாகத் (Cool off time) தரப்பட்டுள்ளது. இந்நேரத்தில் விடை எழுதவோ விவாதிக்கவோ கூடாது.
2. இந்நேரத்தை வினாக்களைப் படித்துப் புரிந்துகொள்ளவும் விடையைத் திட்டமிடவும் பயன்படுத்த வேண்டும்.
3. விடை எழுதும் முன்பு வினாக்களைக் கவனமாகப் படிக்கவும்.
4. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதவேண்டும்.
5. சில வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி விடை எழுதுக.

## 1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக

10 X 1 = 10

1. காட்சி உருவம் என்றும் உருக்காட்சி என்றும் குறிப்பிடப்படும் இலக்கிய வடிவம்.

அ. தொன்மம் ஆ. குறியீடு

இ. படிமம் ஈ. பன்முகம்

2. கட்டவுடா, செடோகா, இரங்கா, தான்கோ, சோகா என்னும் ஐவகைக் கவிதை வகைகளின் பரிணாம வளர்ச்சியே

அ. சென்ட்றியூ ஆ. லிமறிக்

இ. புதுக்கவிதை ஈ ஹைக்கூ

3. மரபுக் கவிதையிலிருந்து புதுக்கவிதையை வேறுபடுத்தும் முக்கியக் கூறு

அ. யாப்பு ஆ. பண்டிதர் நடை

இ. ஓசை ஈ. எதுகை மோனை

4. 'அவருடைய சினிமா மொழி, ஆளுமை, அட்டகாசமான ஒன்று' என்று பாலுமகேந்திரா சொல்லும் அளவுக்குப் பிரமிப்பை ஏற்படுத்தியவர்.

அ. சத்தியஜித்ரே ஆ. அகிரா குரேசவா

இ. ராமு காரியட் ஈ. கிரீஷ் கர்னாடு

5. சொல்லைக் குறிப்பிடும் மற்றொரு சொல்

அ. கிழவி ஆ. கிளவி

இ. குழவி ஈ. குளவி

6. 'மாதவி ஆடினாள்' என்னும் தொடர் காட்டும் வினை

அ. தன்வினை ஆ. பிறவினை

இ. எச்சவினை ஈ. செயப்பாட்டுவினை

7. கோபத்தைச் சுட்டுவது

அ. இளிவரல் ஆ. மருட்கை

இ. அச்சம் ஈ. வெகுளி

8. தோல்பாவைக் கூத்து நடத்துபவர் இசைக்கும் இசைக்கருவி

அ. மிருதங்கம் ஆ. சுதி

இ. கஞ்சிறா ஈ. மணி

9. ஏலாதி என்னும் நூலை இயற்றியவர்

அ. காரியாசான் ஆ. கணிமேதாவியார்

இ. முன்றுரையரையனார் ஈ. விளம்பிநாகனார்

10. 'செம்புலப் பெயல்நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே'

என்னும் பாடல் வரிகளை உள்ளடக்கிய நூல்

அ. நற்றிணை ஆ. குறுந்தொகை

இ. ஐங்குறுநூறு ஈ. கலித்தொகை

## 11 முதல் 14 வரையுள்ளவற்றைச் சரியாகப் பொருத்துக

4 X 1 = 4

| | | |
|---|---|---|
| 11. தொல்காப்பியம் | – | ஒழுக்கச் சட்டம் |
| 12. சிலப்பதிகாரம் | – | நாட்டின் அழகு |
| 13. நாலடியார் | – | வரலாற்றுப் பதிவேடு |
| 14. நளவெண்பா | – | இலக்கண வரைபடம் |

## 15 முதல் 18 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று கருத்துகள் அமையும்படி விடை எழுதுக

4 X 3 = 12

15. ந. பிச்சமூர்த்தியின் கருத்துப்படி, பாலை வரவழைக்கச் செய்துவந்த பழைய தந்திரத்தையும் இன்றைய நிலையினையும் ஒப்பீடு செய்க.

16. தோல்பாவைக் கூத்தில் இடம்பெறும் கதைகள் குறித்து ஒரு வானொலி உரை தயாரிக்க.

17. 'சங்ககால மக்களும் இயற்கையோடு இயைந்த வாழ்வும்' என்னும் தலைப்பில் நடைபெறும் விவாதத்தில் பங்கேற்கக் குறிப்புகள் தயாரிக்க.

18. 'மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து' – இப்பாடலைப் படித்து, அன்றைய – இன்றைய மக்களின் விருந்தோம்பல் பண்புகளை ஒப்பிட்டு, ஒப்பீட்டுக் குறிப்பு தயாரிக்க.

## 19 முதல் 23 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு கருத்துகள் அமையும்படி விடை எழுதுக.

5 X 4 = 20

19. ஹைக்கூ கவிதையின் தோற்றம் பற்றியும் 'ஜப்பானிய ஹைக்கூ' பற்றியும் நீவிர் அறிந்த கருத்துகளைச் சான்றுடன் தருக.

20. 'நோக்கின்றி சாட்டையின்றி தானாக விரையும் கிரகங்களின் தளங்களை அமைத்துவிடுவோம்' என்று ந. பிச்சமூர்த்தி முன்வைத்திருக்கும் கருத்தை இக்காலச் சூழிலில் எவ்வாறு காண்கிறீர்கள்? சிறு குறிப்பு வரைக.

21. சைபர் கிரைமில் ஏற்றுக் கொள்ளப்படும் புகார்களில் உங்களுக்குத் தெரிந்த நான்கு புகார்களைப் பட்டியலிடுக.

22. 'இலக்கணம் தாய், மொழியியல் சேய்' – இக்கூற்றின் உண்மையை மதிப்பீடு செய்க.

23. நாட்டார் இலக்கியங்கள் பற்றிக் குறிப்புரை எழுதுக.

## 24, 25 வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் ஐந்து கருத்துகள் அமையும்படி விடை எழுதுக

2 X 5 = 10

24. 'சமூகத்தில் மின் ஊடகங்களின் ஆதிக்கம்' குறித்துப் பத்திரிகை ஒன்றுக்குத் தலையங்கம் எழுதுக.

25. மொழியியலின் பிரிவுகளைப் பகுத்துக்காட்டி விளக்கம் தருக

## 26 முதல் 28 வரையிலான வினாக்களுக்கு, இரு பக்கங்களுக்குக் குறையாமல் கட்டுரை வடிவில் விடை தருக.

3 X 8 = 24

26. கேரள அரசின் சார்பில் நடக்கவிருக்கும் அறிவியல்தினக் கருத்தரங்கில் பங்கேற்க 'இளந்தலைமுறையினரும் இணையப் பயன்பாடும்' என்னும் தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை தயாரிக்க.

அல்லது

'நாட்டுப்புறப் பாடல்களில் விஞ்சி நிற்பது இசையே! பண்பாட்டுக் கூறுகளே!' என்னும் தலைப்பில் பட்டிமன்றம் நடக்கவிருக்கிறது. நீவிர் விரும்பும் பொருளுக்கு வலுசேர்க்கும் வகையில் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

27. திரைப்படங்கள் யதார்த்த வாழ்க்கையின் பிரதிபலிப்புகளா? உங்கள் கருத்துகளை முன்வைக்க.

அல்லது

அழிந்துவரும் நாட்டுப்புறக் கலைகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுவது தொடர்பாக நாட்டுப்புறவியல் ஆய்வாளர் ஒருவரை நேர்காணத் தேவையான எட்டு வினாக்கள் தயாரிக்க.

28. உங்கள் ஊர்த் தமிழ்ச்சங்கத்தில் நடைபெறப்போகும் சொற்பொழிவில் பங்கேற்கும் பொருட்டு 'இலக்கியங்களில் இயற்கை' என்றும் தலைப்பில் சொற்பொழிவு உரை ஒன்று தயார் செய்க.

அல்லது

சுற்றுப்புறச் சூழல் தினவிழாவை முன்னிட்டுப் பள்ளியில் நடைபெறவிருக்கும் கட்டுரைப் போட்டியில் பங்கேற்க, 'இயற்கையோடு இயைந்த வாழ்வே நலமான வழ்வு' எனும் தலைப்பில் கட்டுரை ஒன்று தயார் செய்க.

# சிறப்புத்தமிழ் - மாதிரிவினாத்தாள்
# மதிப்பீட்டுக் குறிப்புகள்

| வினா என் | விடைக் குறிப்புகள் | மதிப் பெண் | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | இ. படிமம் | 1 | 1 |
| 2 | ஈ. ஹைக்கூ | 1 | 1 |
| 3 | அ. யாப்பு | 1 | 1 |
| 4 | ஆ. அகிரா குரேசவா | 1 | 1 |
| 5 | ஆ. கிளவி | 1 | 1 |
| 6 | அ. தன்வினை | 1 | 1 |
| 7 | ஈ. வெகுளி | 1 | 1 |
| 8 | ஈ. மணி | 1 | 1 |
| 9 | ஆ. கணிமேதாவியார் | 1 | 1 |
| 10 | ஆ. குறுந்தொகை | 1 | 1 |
| 11 | தொல்காப்பியம் - இலக்கண வரைபடம் | 1 | 1 |
| 12 | சிலப்பதிகாரம் - வரலாற்றுப் பதிவேடு | 1 | 1 |
| 13 | நாலடியார் - ஒழுக்கச் சட்டம் | 1 | 1 |
| 14 | நளவெண்பா - நாட்டின் அழகு | 1 | 1 |
| 15 | • வைக்கோலால் பொய்க்கன்றை உருவாக்கி பசுவினை ஏமாற்றுதல்<br>• இன்றைய அறிவியல் வளர்ச்சியைப் பயன்படுத்தி தோலால் ஆன கன்றினை உருவாக்க வேண்டும்<br>• அன்றைய தந்திரத்தை இன்றைய அறிவியல் வளர்ச்சியோடு ஒப்பிடல் | 1<br>1<br>1 | 3 |
| 16 | • புராணக் கதைகள்/மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசக் கதைத் தொகுதிகள்<br>• வரலாற்றுக் கதைகள்<br>• சமூகக் கதைகள் | 1<br>1<br>1 | 3 |
| 17 | • ஐவகை நிலப்பாகுபாடு/ முதல், கரு, உரிப்பொருள்கள்<br>• பிற உயிரினங்களைத் தங்களோடு இணைத்துக் காணுதல்<br>• இயற்கை வழிபாடு | 1<br>1<br>1 | 3 |
| 18 | • விருந்தோம்பல் பண்பே தமிழர்களின் தலையாய பண்பாடு<br>• விருந்தினரை அன்போடு உபசரித்தல்<br>• விருந்தோம்பல் பண்பு குறைந்து வருகிறது<br>• விருந்தினர்களை உபசரிக்கும் மனப்பாங்கும் குறைந்து வருகிறது | 1<br>1<br>1<br>1 | 4 |
| 19 | • ஹைக்கூ - விளக்கம்<br>• ஹைக்கூ - கவிதைத் தோற்றம்<br>• ஹைக்கூவுக்கு முன்னோடியாக ஐந்து கவிதை வடிவங்களைச் சுட்டியுள்ளார்<br>• மூன்றாவது வரியில் முக்கியக் கருத்து அமையும் | 1<br>1<br>1<br>1 | 4 |
| 20 | • அறிவியல் வளர்ச்சியைப் பயன்படுத்தி புதுமையைக் கண்டுபிடித்தல்<br>• இக்கலாச்சூழல் (நிலவுப் பயணம், நிலவில் வீடுகட்டுதல், செயற்கைக்கோள்)<br>• கருத்து<br>• ஒப்பீட்டுத்திறன் | 1<br>1<br>1<br>1 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 21 | • இன்டர்நெட் கடவுச்சொல் திருட்டு<br>• அச்சுறுத்தும் மின் அஞ்சல்கள்<br>• குழந்தைகள் வன்கொடுமை (ஆபாசத்தளங்கள்)<br>• கடன் அட்டை திருட்டு/வலைத்தளத்தில் அனுமதியின்றி புகுதல் | 1<br>1<br>1<br>1 | 4 |
| 22 | • முதலில் தோன்றியது இலக்கணம்<br>• இக்காலத்தை ஒட்டி எழுந்தது மொழியியல்<br>• மொழியின் நிலையை எடுத்துரைப்பது இலக்கணம்<br>• மொழியை அறிவியல் நோக்கில் பகுப்பாய்வு செய்கிறது மொழியியல் | 1<br>1<br>1<br>1 | 4 |
| 23 | • பரம்பரையாகச் செவிவழியாகக் கேட்டும் சொல்லப்பட்டும் பாடப்பட்டும் வந்த கதைகளும் பாடல்களும் இதிலடங்கும்<br>• இவை தனிமனிதனின் படைப்புகள் அல்ல. இவற்றை ஒரு சமூகத்தின் பொதுச்சொத்துகள் எனலாம்<br>• இலக்கண வரையறைகளுக்குக் கட்டுப்படாமல் சிறந்த ஓசை நயத்துடனும் சாதாரண மக்களின் பேச்சுவழக்குச் சொற்களுடனும் அமைபவை<br>• கதைகள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் எனப் பலவகைகளாகப் பகுக்கப்பட்டுள்ளனை. | 1<br>1<br>1<br>1 | 4 |
| 24 | • சுதந்திர எழுத்துக்களம் அமைத்துத் தருவது, பல்வேறு தகவல்களைப் பெறலாம்<br>• டிவிட்டரில் எழுதினால் உலக கவனத்தை ஈர்க்கமுடியும்<br>• முகநூல் வாயிலாகச் செய்திகளைப் பகிர்தல்<br>• வலைப்பூக்கள் வாயிலாகச் செய்திகளைப் பகிர்தல்<br>• இளந்தலைமுறையினரிடையே அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன | 1<br>1<br>1<br>1<br>1 | 5 |
| 25 | • மொழியியல் என்பதன் விளக்கம்<br>• மொழியியல் பிரிவுகள் - மூன்று<br>• ஒலியனியல் - விளக்கம்<br>• உருபனியல் - விளக்கம்<br>• தொடரியல் - விளக்கம் | 1<br>1<br>1<br>1<br>1 | 5 |
| 26 | • இணையம் என்பதன் விளக்கம்<br>• இளந்தலைமுறையும் கணினியும்<br>- தகவல்களைப் பதிவிறக்கம் செய்தல்<br>- முகநூல்வழி செய்திகள் கொடுத்துப் பிறர் கருத்தை அறிதல்<br>- ட்விட்டர், வலைப்பூக்கள் பயன்படுத்துதல்<br>• வேலைவாய்ப்பை உருவாக்குவதில் இணையம்<br>• இளந்தலைமுறையினரிடையே ஏற்படுத்தும் தீய விளைவுகள்<br>• தீர்வுகள்<br>• மொழிநடை | 1<br>3<br><br><br><br>1<br>1<br>1<br>1 | 8 |
| | அல்லது | | |
| | • இசையே !<br>- நாவை ஆட்டிப்பாடுவதல் இசைச்சிறப்பு<br>- முத்தமிழில் ஒன்று இசை<br>- இசைக்கு மொழி பிரச்சினையில்லை<br>- இசைக்கு மயங்காதவர்கள் இல்லை<br>- இன்று திரைப்படங்களில் நாட்டுப்புறப்பாடல் ஒன்றேனும் இடம்பெறுகிறது<br>- ஓசை<br>- உச்சரிப்பு<br>- சுவை வெளிப்பாடு<br>- பாடல்தேர்வு | 4 | |
| | • பண்பாட்டுக்கூறுகளே !<br>- தாய்மை உணர்வின் வெளிப்பாடே தாலாட்டு<br>- அறிவை வளர்ப்பதாகவும் மகிழ்விப்பதாகும் அமைவது விளையாட்டுப் பாடல்கள் | 4 | |

| | | | |
|---|---|---|---|
| | – அறுவடைப் பாடல்கள் / தொழில் பாடல்கள்<br>– ஒப்பாரிப்பாடல்கள்<br>– பழங்காலப் பண்பாட்டின் எச்சம்<br>– சடங்கு முறைகள்<br>– கதைப்பாடல்கள்<br>– நாட்டுப்புறப் பாடல்கள் | | 8 |
| 27 | • திரைப்படங்கள் – இருவகை<br>– ஜனரஞ்சக திரைப்படங்கள்<br>– கலைத்தன்மைவாய்ந்தத் திரைப்படங்கள்/ஜனரஞ்சகம் அல்லாத திரைப்படங்கள்<br>• ஜனரஞ்சகத் திரைப்படங்கள் – வாழ்க்கையை மிகைப்படுத்திக் கூறுகின்றன<br>• அவற்றில் யதார்த்த வாழ்க்கையின் பிரதிபலிப்புகள் இல்லை<br>• சில கருத்துகள்/சில எடுத்துக்காட்டுகள்<br>• வெளியீட்டுத்திறன்<br>• கருத்துக்கோவை | 2<br><br><br>1<br>1<br>2<br>1<br>1 | 8 |
| | அல்லது | | |
| | • நாட்டுபுறக் கலைகள் அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன<br>• இதற்கான காரணங்களைக் கேட்டறிதல்<br>• காரணங்களை அறிவதற்குப் பொருத்தமான வினாக்கள் – 8<br>• வடிவம்<br>• மொழிநடை | 1<br>1<br>4<br>1<br>1 | 8 |
| 28 | • சங்க இலக்கியங்கள் இயற்கையோடு நெருங்கிய தொடர்புடையவை<br>• பிற்கால இலக்கியங்களும் இயற்கைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன<br>• இன்றைய இலக்கியங்கள் இயற்கை அழிவுக்கு எதிராகக் குரல் கொடுக்கின்றன<br>• எக்காலத்தும் இயற்கை இலக்கியப் பாடுபொருளாகவே இருந்து வருகிறது<br>• வடிவம்<br>• கருத்துக்கோவை<br>• வெளியீட்டுத் திறன்<br>• மொழிநடை | 1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1 | 8 |
| | அல்லது | | |
| | • மனித வாழ்க்கை இயற்கையோடு இயைந்தது<br>• இயற்கை இன்றி மனித வாழ்க்கை இல்லை<br>• செயற்கை வாழ்வு உடல் நலக்கேட்டிற்கும் மனச்சிக்கல்களுக்கும் ெகாரணமாகின்றது<br>• மேற்கோள்கள்<br>• உட்தலைப்புகள்<br>• கருத்துக்கோவை<br>• வெளியீட்டுத்திறன்/ வடிவம்<br>• மொழிநடை | 1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1 | 8 |